| F–7211 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA1C1 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2022.**

**First Semester**

தமிழ்

இக்கால இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours    Maximum : 75 Marks

பகுதி அ    (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. கவிமணி பிறந்த ஊர், பிறப்பு, இறப்பு ஆண்டு ஆகியவற்றைக் கூறுக.

2. முடியரசன் படைத்த காப்பியங்களைக் கூறுக.

3. இன்குலாப் அவர்களின் இயற்பெயர் என்ன? படைப்புகள் இரண்டினைக் கூறுக.

4. புவியரசு தடம் பதித்த துறைகள் நான்கினைக் கூறுக.

5. ஆனந்த விகடனில் பிரசுரமான ஜெயகாந்தனின் சிறு கதைகளைக் கூறுக.

6. கு.ப.ரா. சிறுகதை எழுதிய இதழ்களின் யெர்களைக் கூறுக.

7. கோ.வி. மணிசேகரன் எழுதிய முதல் நாவல் எது?

8. நா.பா.வின் பல்வேறு புனை பெயர்களைக் கூறுக.

9. வ.சுப. மாணிக்கனார் இயற்றிய ஆய்வு நூல்களைக் கூறுக.

10. 'படிப்பது எப்படி' என்ற கட்டுரையின் ஆசிரியர் யார்? அவர் பிறந்த ஊர் எது?

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) சமரசப் பொங்கல் குறித்து நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துக்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) திரௌபதி சபையில் நீதிகேட்கும் முறை குறித்து விளக்கி எழுதுக.

12. (அ) மீராவின் படைப்பாளுமையை 'மூன்றும் ஆறும்' கவிதைத் தொகுதி கொண்டு விளக்குக.

(அல்லது)

(ஆ) 'தேசப் பிதாவுக்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி' கவிதை உணர்த்தும் கருத்துக்களை மு. மேத்தா கவிதை கொண்டு விளக்குக.

13. (அ) 'புதிய கதை' சிறுகதை உணர்த்தும் கதைக் கரு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) 'இளஞ்சிறகுகள்' சிறுகதை வழி அறியலாகும் தனித் தன்மைகளை எடுத்துரைக்க.

14. (அ) குற்றாலக்குறிஞ்சி நாவலின் கதைக் கருவை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சத்திய வெள்ளம் நாவலின் கதைப் பின்னலை எடுத்தியம்புக.

15. (அ) 'சான்றோன்' என்ற கட்டுரையில் வ.சுப. மாணிக்கனார் புலப்படுத்தும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'காற்றும் கற்பனையும்' என்ற நாடகம் உணர்த்தும் கதைக் கருவை விளக்கி எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சஞ்சீவி பருவத்தின் சாரலில் பிறநாட்டார் பற்றி அறியலாகும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

17. அப்துல் ரகுமான் 'தொன்மம்' என்ற உத்திமுறையைக் கையாளுவதில் வல்லவர் என்பதை தம் படைப்பு கொண்டு நிறுவுக.

18. புதிய வார்ப்புகள் சிறுகதைகளின் வழி அறியலாகும் இயக்கிய நயங்களைத் தொகுத்துரைக்க.

19. தோல் தொழிலாளர்களின் பல்வேறு அவல நிலைகளாக ஆசிரியர் டி. செல்வராஜ் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

20. குலசேகராழ்வாரின் சிந்தனைகளை 'இலக்கிய உலா' கொண்டு நிறுவுக.

———————

| F–7212 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA1C2 |

## M.A. DEGREE EXAMINATION, APRIL 2022.

### First Semester

### தமிழ்

### பக்தி இலக்கியம்

### (CBCS – 2017 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. திராவிட சிசு என்றழைக்கப்பட்டவர் யார்? இவரின் வேறு பெயர்கள் யாவை?

2. திருநாவுக்கரசர் பிறந்த ஊர் எது? தமக்கையின் பெயர் யாது?

3. சேந்தனார் என்ன தொழில் புரிந்து சிவனடியார்க்குக் கூழ் என்னும் அமுதினை எந்நாளில் படைத்தார்?

4. காரைக்கால் அம்மையாரின் தந்தை பெயர், கணவர் பெயர் என்ன?

5. ஆண்டாள் அவதரித்த தலம் எது? பாடி அருளிய சங்கத்தமிழ் மாலை எனப் போற்றப்படும் நூல் எது?

6. சேர மன்னராக இருந்து அரசைத் துறந்த ஆழ்வார் யார்? அவர் பிறந்த ஊர் எது?

7. ஹச்.ஏ கிருஷ்ணபிள்ளை முதலில் பின்பற்றிய சமயம் எது? பின்பு மாறிய சமயம் எது?

8. ‘இரட்சணியம்’என்பதன் பொருள் யாது?

9. குணங்குடி மஸ்தான் யாருடைய பாடல்களில் அதிக ஈடுபாடு கொண்டவர்? இவர் எம்மரபினராகக் கருதப்படுகிறார்?

10. குணங்குடி மஸ்தான் சாகிபு பிறந்த மாவட்டம், ஊர், எது?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இறைவனின் திருவருளாகச் சம்பந்தர் குறிப்பிடுவனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) சுந்தரர் கூறும் இறைவனின் தன்மைகளைத் திருவாரூர் பதிகம் கொண்டு விளக்கியுரைக்க.

12. (அ) மாணிக்கவாசகர் அரச வண்டினிடம் தில்லைக் கூத்தனுக்கு இறைத்தொண்டாற்றிடக் கூறியதை விளக்குக.

(அல்லது)

(ஆ) சேந்தனார் சிதம்பரத்தில் தமது இல்லத்தில் சிவனடியார்க்குச் செய்த பணியை விவரிக்க.

13. (அ) ஆண்டாள் பாடிய மார்கழித் திங்கள்... ஓங்கி உலகளந்த எனும் இரு பாடல்களின் சிறப்பினைத் தருக.

(அல்லது)

(ஆ) நம்மாழ்வார் பெருமான் திருவடி சேர்ந்த நிலையினை திருவாய்மொழி 'எம்மா வீட்டு பதிக' வழி நின்று விளக்குக.

14. (அ) இரட்சணிய சரிதம் – தமிழ் இலக்கியங்களுடன் ஒத்த காப்பியப் பண்புகள் நிறைந்தது என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) இரட்சண்ய சரிதத்தில் இடம் பெற்ற உபதேசங்கள், பிராமணங்கள், சுவிசேச நெறிப் பயன்கள் குறித்து எழுதுக.

15. (அ) குணங்குடி மஸ்தான் பராபரமே என்று பாடி பரிபூரணப் பேரின்பம் பெரும் வழியைக் கூறுக.

(அல்லது)

(ஆ) ஆனந்தக் களிப்பு வாயிலாக இறைநிலையை அடையக் கூறும் பாங்கினை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. திருக்குறுந்தொகை, ஐந்தாம் திருமறைப் பதிக வழி நின்று திருநாவுக்கரசரின் பக்தித் திறத்தைப் புலப்படுத்துக.

17. காரைக்காலம்மையார் வெளிப்படுத்தும் இறைப்பெருமைகளை அந்தாதிப் பாடல்களின் மூலம் எடுத்துரைக்க.

18. குலசேகராழ்வார் திருமொழியில் இறைவனைக் கண்டு இன்புற ஏக்கத்தைப் புலப்படுத்தும் பாங்கினைத் தொகுத்துரைக்க.

19. எச்.ஏ கிருஷ்ணப்பிள்ளை இரட்சண்ய சரித்திரத்தில் கூறிய கதை நிகழ்வுகளைத் தந்து விளக்கியுரைக்க.

20. குணங்குடி மஸ்தான் ஆனந்தக் களிப்பு பாடல்கள் வழி அறியலாகும் தத்துவக் கருத்துக்களைக் கட்டுரைக்க.

———————

| F–7214 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA1C4 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2022.**

**First Semester**

**தமிழ்**

**தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (இளம்பூரணர் உரை)**

**(CBCS – 2017 onwards)**

Time : Three Hours                                        Maximum : 75 Marks

**பகுதி அ**                                        (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் – விளக்குக.

2. க ச த ப என அகரமொடு வரும் என்ற நூற்பா உணர்த்தும் பொருள் யாது?

3. க, ஞ என்ற எழுத்துக்கள் பிறக்கும் முறையினைக் கூறுக.

4. 'வரன்முறை மூன்றும் குற்றெழுத்து உடைய' – பொருள் தருக.

5. 'அத்திடை வருஉங் கலமென் அளவே' – விளக்குக.

6. ஞ ந என்னும் புள்ளியீறுகட்கு வரும் சாரியை யாது?

7. 'யவமுன் வரினே வகரம் ஒற்றும்' – விளக்குக.

8. 'ஆண் மரக் கிளவி அரைமர வியற்றே' – பொருள் தருக.

9. வண்டு, பெண்டு என்னும் சொற்கள் எச்சாரியை பெற்று வரும்?

10. ஒலியணியல் என்றால் என்ன?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் <u>ஒரு பக்க</u> அளவில் விடை தருக.

11. (அ) மெய்ம்மயக்கம் என்றால் என்ன? விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) மொழி முதல் வரும் எழுத்துக்கள் குறித்து விளக்குக.

12. (அ) உயிர் எழுத்துக்களின் பிறப்பு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) 'ஆங்கநான்கே மொழிபுணர் இயல்பே' – விளக்குக.

13. (அ) உயிர் ஈறு, மெய் ஈறுகளின் சிறப்புப் புணர்ச்சி விதி குறித்துத் தொகை மரபு கூறும் கருத்துக்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) முற்றுகரக், குற்றுகர ஈறுகள் குறித்து விளக்கி எழுதுக.

14. (அ) அகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) ணகர, னகர ஈற்றுப் புணர்ச்சியால் நிகழும் மாற்றங்களைத் தக்க சான்றுகளுடன் விளக்குக.

15. (அ) எண்ணுப்பெயர் புணர்ச்சி நிலைகளை குற்றியலுகரப் புணரியல் வழி நின்று விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒலி விகாரங்கள் குறித்து விளக்கி எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மொழி மரபில் கூறப்படும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

17. வேற்றுமைப் புணர்ச்சி பற்றிப் புணரியல் கூறும் கருத்துக்களை விவரிக்க.

18. 'இலக்கண விதிகளைத் தொகுத்துக் கூறும் இயலே தொகை மரபு' என்னும் கூற்றை ஆராய்க.

19. உயிர் மயங்கியலில் உகர, ஊகார ஈற்றுப் பெயர்களுக்குக் கூறப்பெற்றுள்ள விதிகளைத் தொகுத்துரைக்க.

20. குற்றியலுகரப் புணரியல் எனத் தனி இயலைத் தொல்காப்பியர் வகுத்தமைக்கான காரணங்களை ஆராய்க.

| F–7215 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA1E3 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2022.**

**First Semester**

தமிழ்

விருப்பப்பாடம் : கோயிற் கலை

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. ஆகமங்கள் என்றால் என்ன?

2. தலம் என்றால் என்ன?

3. ஆறுகாலப் பூசைகள் எவையெவை எனக் கூறுக.

4. கோவில்களில் நடைபெறும் விழாக்கள் மூன்றினைக் கூறுக.

5. 'நகரத்தார்' – பொருள் தருக.

6. நிருவாகம் என்றால் என்ன?

7. திருவுருவ அமைதி என்றால் என்ன?

8. குறியீடுகள் என்றால் என்ன?

9. வழிபாடு என்றால் என்ன?

10. இசுலாமிய சமய நம்பிக்கைகள் மூன்றினைக் கூறுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) சிறுதெய்வக் கோயில்களின் அமைப்பு முறை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) கோயில்களில் 'தீர்த்தம்' பெறுமிடத்தினை ஆராய்க.

12. (அ) வழிபாட்டில் காலம் பெறுமிடத்தினை தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) திருவீதி உலா என்றால் என்ன? அதன் சிறப்புகள் குறித்து விளக்குக.

13. (அ) மடங்களின் செயல்பாடுகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) தொல்பொருள் துறையின் பங்கும் பணியும் குறித்து விளக்குக.

14. (அ) இசுலாமிய திருவுருவ நிலை குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சிவபெருமானின் திருவுருவச் சிறப்பு குறித்து விளக்குக.

15. (அ) பெருந்தெய்வ, சிறுதெய்வ நம்பிக்கைகளை வேறுபடுத்துக.

(அல்லது)

(ஆ) கிறித்துவ வழிபாட்டு முறைகள் குறித்து விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. கோயில்களின் இன்றைய நிலை குறித்து கட்டுரை வரைக.

17. கோயில்களின் வகைகள் குறித்துக் கட்டுரை வரைக.

18. கோயில் நிருவாகத்தில் பண்டைக்கால மன்னர்களின் பங்கும் பணியும் குறித்து விவரிக்க.

19. நாட்டுப்புற ஆண் தெய்வங்களின் சிறப்புகள் குறித்துக் கட்டுரை வரைக.

20. சிறுதெய்வங்களுக்குப் படைக்கப்பெறும் படையல் பொருள்களும் அதனால் விளையும் நன்மை தீமைகளும் குறித்து விவரிக்க.

| F–7216 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA2C1 |

**M.A DEGREE EXAMINATION, APRIL 2022.**

**Second Semester**

தமிழ்

காப்பிய இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : Three Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. 'மாயம் கொல்லோ வல்வினை கொல்லோ' – கூற்றுக்கு உரியவர் யார்?

2. அறவண அடிகள் குறிப்புத் தருக.

3. 'அங்கதிலகன்' , 'காமதிலகன்' என்று சீவகசிந்தாமணியில் சுட்டப்படுபவன் யார்?

4. பெருங்கதையின் வேறு பெயர்களைச் சுட்டுக.

5. சீதையிடம் சூளாமணி பெற்றுவந்தவர் யார்?

6. சேக்கிழாருக்கு வழங்கப்பட்ட பட்டங்களுள் இரண்டினை எழுதுக.

7. பரஞ்சோதி முனிவர் குறிப்பு தருக.

8. வில்லிப்புத்தூராரை ஆதரித்தவர் யார்?

9. இரட்சண்யயாத்ரிகத்தின் மூல நூல் குறித்து எழுதுக.

10. சீறாப்புராணம் குறிப்புத் தருக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஆய்ச்சியர் குரவையில் சுட்டப்படும் திருமால் பெருமைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) மணிமேகலை உணர்த்தும் பசிப்பிணி குறித்து விளக்குக.

12. (அ) சீவகன் சுரமஞ்சரியைக் காணவந்த வரலாற்றைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) உதயணன் பண்பு நலன்களைக் குறிப்பிடுக.

13. (அ) சுந்ரதகாண்டத்தின் வழி அனுமனின் ஆற்றலை விவரிக்க.

(அல்லது)

(ஆ) சுந்தரரை இறைவன் தடுத்தாட்கொண்ட சூழல் குறித்து எழுதுக.

14. (அ) பரஞ்சோதி முனிவர் சுட்டும் இறைவனின் பெருமைகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) தருமனின் தோல்வியைக் கண்டு அவையோர் வருந்தி மொழிந்தனவற்றைக் குறிப்பிடுக.

15. (அ) இரட்சண்ய யாத்திரிகத்தில் காணலாகும் பிற இலக்கியச் செல்வாக்குகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நபி அவதாரப் படலம் குறித்து விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மதுரைக்காண்டத்தின் வழி நின்று கண்ணகியின் பண்பு நலன்களை விளக்கி வரைக.

17. பெருங்கதை உணர்த்தும் அறங்களை நும்பாடப்பகுதியின் வழி நின்று விளக்குக.

18. சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட இறைவனின் அருள் திறத்தை விவரிக்க.

19. சூதாட்டச் சருக்கம் உணர்த்தும் அறக்கருத்துக்களை விளக்கி வரைக.

20. இரட்சண்ய யாத்ரீகம் உணர்த்தும் இறை நெறிகள் குறித்து விவரிக்க.

———————

| F–7217 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA2C2 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2022.**

**Second Semester**

**தமிழ்**

**சிற்றிலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. கலம்பகம் என்றால் என்ன?

2. குமரகுருபரர் கந்தர்கலிவெண்பா பாடப்பெற்றதன் நோக்கம் யாது?

3. தூது என்றால் என்ன?

4. தூது இலக்கியத்தை முதன் முதலில் பதிப்பித்து வெளியிட்டவர் யார்?

5. முதற்குலோத்துங்கனின் படைத் தலைவன் யார்?

6. விக்கிரம சோழனின் சிறப்புப் பெயர்களைக் கூறுக.

7. முக்கூடற்பள்ளின் பாட்டுடைத் தலைவன் யார்? அவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

8. அபிராமிப்பட்டர் எழுதிய நூல்களைக் கூறுக.

9. திரிகூடராசப்பக்கவிராயர் பிறந்த ஊர் எது? அவர் இயற்றிய நூல்களைக் கூறுக.

10. நால்வர் நான்மணிமாலைக்கு வழங்கும் பிறபெயர்களைக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பாட்டுடைத் தலைவனின் வீரச் சிறப்பு குறித்து நந்திக்கலம்பகம் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) குமரகுருபரர் குழந்தையைக் காக்க வேண்டி திருமாலிடம் யாது வேண்டினர்? விளக்கி எழுதுக.

12. (அ) தமிழைச் சான்றோராகப் போற்றும் விதம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழின்பால் சொக்கநாதர் கொண்ட அன்பினை விளக்கி எழுதுக.

13. (அ) கலிங்கப் போருக்கான காரணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) விக்கிரமசோழனின் வரலாற்றைச் சுருக்கி வரைக.

14. (அ) அபிராமி அம்மையின் தோற்றப்பொழிவினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இளைய பள்ளியின் ஏசல் திறனை விளக்கி எழுதுக.

15. (அ) குற்றாலமலையின் இருப்பிடம் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சுந்தரமூர்த்தி நாயனாரின் சமயப்பணிகளை நான்மணிமாலை கொண்டு விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. செங்கீரைப் பருவத்தின் சிறப்புக்களை முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் கொண்டு நிறுவுக.

17. தமிழ்விடு தூது என்ற நூலில் தமிழைத் தேவர்களோடு தொடர்புபடுத்தி எவ்வாறெல்லாம் புகழ்கிறார் என்பதை ஆராய்க.

18. காஞ்சியில் குலோத்துங்கனது திருவோலகச் சிறப்புக் குறித்துக் கட்டுரை வரைக.

19. அபிராமிப்பட்டரின் பக்தி நெறியினை அபிராமி அந்தாதி கொண்டு விவரிக்க.

20. திரிகூடராசப்பக்கவிராயர் திருக்குற்றால மலை வளத்தைக் காட்சிப்படுத்தும் விதம் குறித்துத் தொகுத்துரைக்க.

| F–7218 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA2C3 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2022.**

**Second Semester**

**தமிழ்**

**இலக்கியக் கொள்கைகளும் திறனாய்வும்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. 'திறனாய்வு' என்றால் என்ன?

2. திறனாய்வாளன் தகுதிகள் இரண்டினைச் சுட்டுக.

3. திறனாய்வு வகைகள் யாவை?

4. ஒப்பீட்டு முறைத் திறனாய்வு என்றால் என்ன?

5. படைப்புக் கற்பனை என்றால் என்ன?

6. கற்பனை பற்றிய வின்செஸ்டர் கருத்து யாது?

7. சிறுகதையின் இலக்கணம் கூறுக.

8. சென்ட்ரியூ என்றால் என்ன?

9. அறிவியல் திறனாய்வு கொள்கைகள் என்றால் என்ன?

10. உளவியல் திறனாய்வு என்பது யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) திறனாய்வின் நோக்கங்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) திறனாய்வும், திறனாய்வாளனும் வேறுபடுத்தி விளக்குக.

12. (அ) விதிமுறைத் திறனாய்வு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) வாழ்க்கை வரலாற்று வழித் திறனாய்வு விளக்குக.

13. (அ) இயைபுக் கற்பனை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) கற்பனையும், வெறுங்கற்பனையும் வேறுபடுத்தி ஆராய்க.

14. (அ) கவிதை என்றால் என்ன? விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) நாடகத்தின் கதைக்களம் குறித்து விளக்குக.

15. (அ) சமூகவியல் திறனாய்வு கொள்கைகள் என்பது யாது? விளக்குக.

(அல்லது)

(ஆ) அமைப்பியல் கொள்கைகள் குறித்து விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு <u>கட்டுரை வடிவில்</u> விடையளிக்கவும்.

16. திறனாய்வாளனுக்குரிய தகுதிகளை தொகுத்துரைக்க.

17. விளக்கமுறைத் திறனாய்வு மற்றும் மதிப்பீட்டு முறைத் திறனாய்வு முறை பற்றி விவரிக்க.

18. கற்பனையின் வகைகள் குறித்துக் கட்டுரை வரைக.

19. புதுக்கவிதையின் இன்றைய போக்கு குறித்து விவரிக்க.

20. திறனாய்வுக் கொள்கைகள் குறித்து கட்டுரை வரைக.

| F–7219 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA2C4 |

## M.A. DEGREE EXAMINATION, APRIL 2022.

### Second Semester

### தமிழ்

### தொல்காப்பியம் — சொல்லதிகாரம் (சேனாவரையர் உரை)

### (CBCS – 2017 onwards)

Time : 3 Hours | Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. ஆண்பால் ஈறுகள் என்றால் என்ன? எ.கா.தருக.

2. பகுதிக்கிளவி என்றால் என்ன?

3. “விளிகொள் வதன்கண் விளியொடு எட்டே” – விளக்குக.

4. விளியேற்கும் உயர்திணைப் பெயர்களைக் கூறுக.

5. அறிவுடையோர் கூறும் உயர்திணைப் பெயர்கள் யாவை?

6. படர்க்கை ஒருமை வினைமுற்றுச் சொற்களைக் கூறுக.

7. ‘அப்பால் எட்டே உம்மைச் சொல்லே’ – விளக்குக.

8. ‘மா என் கிளவி வியங்கோள் அசைச்சொல்’ – பொருள் தருக.

9. தொகைச்சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

10. ஒட்டுக்களின் வகைகளைக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் <u>ஒரு பக்க</u> அளவில் விடை தருக.

11. (அ) "உயர்திணை மருங்கின் பால் பிரிந்திசைக்கும் " – விளக்குக.

(அல்லது)

(ஆ) இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடையையும் வண்ணச் சினைச் சொல்லையும் ஒப்பிடுக.

12. (அ) ஐந்தாம் வேற்றுமையின் இலக்கணத்தையும் அதன் பாகுபாட்டையும் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆகுபெயரை விளக்கி அதன் பாகுபாட்டை விளக்கி எழுதுக.

13. (அ) வினைச் சொற்களைத் தொல்காப்பியர் எவ்வாறு வகைப்படுத்துகிறார்? ஆய்க.

(அல்லது)

(ஆ) எச்சங்கள் அடிக்கிமுடிதல், எச்சங்களிடையே பிறசொற்கள் வருதல் இவற்றை விளக்குக.

14. (அ) இடைச்சொற்களின் பாகுபாட்டை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) உரிச்சொற்களின் பொருளை அறியும்போது மனதிற் கொள்ள வேண்டியவை யாவை? விளக்குக.

15. (அ) வினைமுற்றின் வகைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) உருபன்களைப் பற்றி சிறு குறிப்பு வரைந்து, தமிழ் வினைச் சொல்லில் அமையும் உருபன்களைப் பிரித்து உணர்த்துக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. வழுக்காத்தலை வலியுறுத்தும் பகுதியே கிளவியாக்கம் என்பதை நிறுவுக.

17. விளி ஏலாத பெயர்களைத் தொகுத்துரைக்க.

18. விரவுப் பெயர்கள் இருதிணைக்கும் பொருந்தும் விதத்தைத் தக்க சான்றுகளுடன் நிறுவுக.

19. "தொல்காப்பியரின் உரியியல் அகராதியின் தோற்றத்திற்கு வித்தாக அமைந்துள்ளது" என்னும் கூற்றை நிறுவுக.

20. எச்சங்களை வகைப்படுத்தி ஆராய்க.

---

| F–7220 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA2E1 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2022.**

**Second Semester**

தமிழ்

விருப்பப்பாடம் — கம்பர்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours    Maximum : 75 Marks

பகுதி அ    (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. காப்பியம் என்றால் என்ன? சான்றுகள் தருக.

2. காப்பியத்தின் உறுப்புகள் இரண்டினை எழுதுக.

3. கம்பரின் காலம் யாது?

4. கம்பராமாயணம் அரங்கேற்றம் குறித்து எழுதுக.

5. கம்பராமாயணத்தில் உள்ள காண்டங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

6. கம்பராமாயணத்தின் மூலநூல் குறித்து எழுதுக.

7. காப்பியப் பார்வை என்றால் என்ன?

8. காப்பிய நேர்மை என்றால் என்ன?

9. நும்பாடப் பகுதியின் வழிநின்று எதிர்நிலைப் பாத்திரங்கள் நான்கினை எழுதுக.

10. காப்பிய ஒப்பீட்டு முறையின் பயன்கள் குறித்து எழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) காவிய மரபுகள் குறித்து விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) காப்பியத்தின் அமைப்பு குறித்து விளக்கம் தருக.

12. (அ) கம்பர் குறித்த செவிவழிச் செய்திகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) கம்பர் கையாண்டுள்ள காப்பிய இலக்கணங்கள் குறித்து விளக்குக.

13. (அ) கம்பராமாயணத்தின் காண்டங்களின் பெயர் பொருத்தத்தை விவரிக்க.

(அல்லது)

(ஆ) கம்பர் கையாண்ட இயற்கை வருணனை குறித்து எழுதுக.

14. (அ) கம்பர் உணர்த்தும் அறம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) இன்மைக் களங்கள் குறித்து எழுதுக.

15. (அ) காப்பிய ஒப்பீடு என்றால் என்ன? சான்றுகள் தருக.

(அல்லது)

(ஆ) கம்பரும் – எழுத்தச்சனும் குறித்து எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழில் காப்பியங்கள் தோன்றிய காலச்சூழல் குறித்து விளக்கி வரைக.

17. கம்பராமாயணத்திற்கு முன்னர் தோன்றிய தமிழ்க் காப்பியங்கள் குறித்து எழுதுக.

18. கம்பர் மூல நூலில் இருந்து வேறுபடும் இடங்கள் குறித்து விளக்கி வரைக.

19. காப்பியப் பார்வைகள் குறித்து விளக்கி வரைக.

20. கம்பர் அமைத்துள்ள காண்டங்களின் கட்டமைப்பு முறையை விவரிக்க.

———————

| F–7221 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA2E3 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2022.**

**Second Semester**

தமிழ்

விருப்பப்பாடம் — சித்தர் இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                                   Maximum : 75 Marks

பகுதி அ                                   (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. 'தத்துவம்' என்றால் என்ன?

2. 'சித்தர்' நால்வரின் பெயர்களைக் குறிப்பிடுக.

3. திருமந்திரம் எத்தனை தந்திரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது? அவை யாவை?

4. "உள்ளத்தூய்மை இருந்தால் எத்துன்பத்தில் இருந்து நீங்குவார்கள்" என்கிறார் சிவவாக்கியார்?

5. உடம்பை "ஊத்தைச் சடலம்" என்று கூறுபவர் யார்?

6. "காலனை வென்ற கருத்தறிவாளர்க்குக் கோலங்கள் ஏதுக்கடி" என்ற பாடலின் பொருள் யாது?

7. திருவெண் காடருக்கு வழங்கப்படும் பிற பெயர்களைக் கூறுக.

8. "காதற்ற ஊசியும் வாராது காண் காண்கடை வழிக்கே" என்று கூறியவர் யார்?

9. பத்திரகிரியார் மன்னன் யாரைக் கழுவிலேற்ற உத்தரவிட்டார்? கழுவிலேற்றும்போது நடந்தது என்ன?

10. "வெல்லும் மட்டும் பார்த்து வெகுளியெல்லாம் விட்டு அகன்று செல்லுமட்டும் சிந்தை செலுத்துவதும் எக்காலம்" என்று பாடியவர் யார்?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) சித்தர்களின் தத்துவங்கள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சித்தர்களின் சமயபேத மறுப்புச் சிந்தனைகள் குறித்து விளக்குக.

12. (அ) திருமந்திரத்தின் சிறப்புகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சிவவாக்கியாரின் காலம் எது? விளக்கி எழுதுக.

13. (அ) குதம்பைச் சித்தர் பாடல்கள் உணர்த்தும் வாழ்வியல் கருத்துக்களைக் கூறுக.

(அல்லது)

(ஆ) 'யோகத்திலே வெற்றி பெற்றோருக்குச் சாவில்லை' என்னும் கூற்றை அழுகணிச் சித்தர் பாடல் வழி விளக்குக.

14. (அ) பட்டினத்தார் பாடல்களில் காணலாகும் தத்துவக் கருத்துக்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) பட்டினத்தார் பாடல்களில் காணப்படும் வாழ்வியல் கருத்துக்களை விளக்குக.

15. (அ) ஞானவல்லியும் பத்திரகிரியாகும் ஆனந்த ஜோதியில் கலந்த விதம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பத்திரகிரியார் கூறும் தத்துவச் சிந்தனைகளை விளக்கி எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. சித்தர்களின் பிறதுறை அறிவை விவரிக்க.

17. சிலவாக்கியாரின் சமயச் சிந்தனைகள் குறித்து விவரித்துரைக்க.

18. யோகத்தையும் — ஞானத்தையும் அழுகணிச்சித்தர் பாடல்கள் எவ்வாறு சித்தரிக்கின்றன? ஆராய்க.

19. பட்டினத்தார் பாடல்கள் புலப்படுத்தும் சித்தாந்தக் கருத்துக்களை விவரிக்க.

20. பத்திரகிரியார் பாடல்களில் வெளிப்படும் வாழ்வியல் சிந்தனைகளைப் புலப்படுத்துக.

| F–7222 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA3C1 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2022.**

**Third Semester**

தமிழ்

சங்க இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. "புதுப்புள் வரினும் பழம்புள் போகினும், விதுப்புற அறியா ஏமக் காப்பினன்" என்ற தொடரின் பொருள் தருக.

2. பதிற்றுப்பத்துள் ஆறாம் பத்தைப் பாடியவர் யார்?

3. "தொலைவில் வெல்வேள் விடலையொடு, என் மகள் இச்சுரம் படர்ந்தோளே" — யார் கூற்று.

4. "அறம் நனி சிறக்க அல்லது கெடுக" என்ற தொடர் இடம்பெற்றுள்ள நூல் எது?

5. "இறையோன் உள்ளம் காலொடு பட்ட மாரி, மால்வரை மிளிர்க்கும் உருமினும் கொடிதே" என்ற தொடரின் பொருள் யாது?

6. "மூ இரு கயந்தலை முந்நான்கு முழவுத்தோள் உடையவன்" யார்?

7. குறிஞ்சி நிலத் தலைவனைக் குறிக்கும் சொற்கள் எவை?

8. "கண்படை பெறாஅது" இருந்தது யார்?

9. சிறுபாணாற்றுப்படையில் தமிழ் நிலைபெற்ற இடமாகக் கூறப்பெற்றுள்ள இடம் எது?

10. சோறு வாக்கிய கொழுங்கஞ்சி, யாறுபோலப் பரந்தொழுகிய இடம் எது?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் <u>ஒரு பக்க</u> அளவில் விடை தருக.

11. (அ) ஊன்பொதி பசுங்குடையார், சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியின் போராற்றலை எவ்வாறு பாராட்டியுள்ளார்? விளக்குக.

(அல்லது)

(ஆ) ஊடல்கொண்ட தன் மனைவியைச் சேரலாதன் எவ்வாறு தேற்றினான்? விளக்கி எழுதுக.

12. (அ) பெருங்குன்றூர் கிழாரின் அகநானூற்றுப் பாடல் உணர்த்தும் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) வேட்கைப் பத்து பாடல்களின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

13. (அ) முருகனின் உருவ வருணனை பற்றிப் பரிபாடல் கூறுவன யாது? விளக்குக.

(அல்லது)

(ஆ) மதுரை மக்கள் புதுப்புனலாடியதைப் பரிபாடல் வழி எடுத்துரைக்கவும்.

14. (அ) தலைவனைப் பிரிந்திருந்த தலைவியின் நிலையைப் பற்றி முல்லைப்பாட்டின் மூலம் எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தலைவனின் பாசறை இருப்பை முல்லைப்பாட்டு எவ்வாறு சித்தரித்துள்ளது.

15. (அ) காவிரிப் பூம்பட்டினத்தின் சிறப்புகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) திருமாவளவனின் கொடைச் சிறப்பை எடுத்துரைக்க.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. புறநானூற்றில் அறியலாகும் தமிழரின் போர் நெறிகள் குறித்து விவரிக்க.

17. வேழப் பத்து புலப்படுத்தும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

18. பாலைநிலத் தன்மையை நற்றிணை வழி விவரிக்க.

19. அறத்தொடு நிற்றலை குறிஞ்சிப்பாட்டின் வழி விரித்துரைக்க.

20. "பட்டினப்பாலை" பெயர்ப் பொருத்தத்தை விரிவாக ஆராய்க.

| F–7223 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA3C2 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2022.**

**Third Semester**

தமிழ்

தொல்காப்பியம் — பொருளதிகாரம் (நச்சினார்க்கினியர் — உரை)

(முதல் ஐந்து இயல்கள்)

**(CBCS – 2017 onwards)**

Time : Three Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. வைகறை விடியல் எத்திணைக்குரிய காலமாகும்?

2. பிரிவிற்குரிய நிமித்தங்களைக் கூறுக.

3. 'வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின் ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்' — பொருள் தருக.

4. கொடிநிலை என்றால் என்ன?

5. பாங்கர் மித்தம் எத்தனை? ஐந்தினைக் கூறுக.

6. அல்ல குறிப்பிடுதல் என்றால் என்ன?

7. கரணம் என்றால் என்ன?

8. 'அலரில் தோன்றும் காமத்து மிகுதி' — பொருள் தருக.

9. தொல்காப்பியர் குறிப்பிடும் பெண்ணுக்குரிய சிறந்த குணங்கள் மூன்றினைக் கூறுக.

10. உள்ளுறையின் வகைகளைக் கூறுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தொல்காப்பியர் அகத்திணையியலில் சொல்லப்படும் உள்ளுறை உவமத்தின் இலக்கணத்தைக் கூறி அதன் சிறப்புக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) பிரிவின்கண் தோழிக்குக் கூற்று நிகழும் இடங்களை விளக்குக.

12. (அ) கரந்தைத் திணையின் இலக்கணம் தந்து அது எத்திணைக்குப் புறன் என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) வாகைத் திணையின் பாகுபாடுகளை விளக்கி எழுதுக.

13. (அ) குறி என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) மெய்யுறு புணர்ச்சி நிகழும் காலம் யாது? தக்க சான்றுகளுடன் விளக்கி எழுதுக.

14. (அ) அறிவர்க்குரிய மரபுகளை தொல்காப்பியர் வழி விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) கற்பியலில் காமக்கிழத்தியர் கூற்று நிகழும் இடங்களை எடுத்துரைக்க.

15\. (அ) தொல்காப்பியர் கூறும் அகப்பொருட் புலநெறி வழக்குகளைப் பொருளியல் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) வரைதல் வேட்கைப்பொருள் என்றால் என்ன? அது எவையெவை எனக் கூறி விளக்குக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16\. தொல்காப்பியர் அகத்திணையியலில் கூறப்படும் கூற்றுக்களால் நீவிர் அறியலாகும் பண்பு நலன்களை ஆராய்க.

17\. பாடாண் திணையின் இலக்கணம் கூறி, அதன் திணைத் துறையினை விவரிக்க.

18\. களவியலுள் தலைவனுக்குக் கூற்று நிகழும் இடங்களைத் தொகுத்துரைக்க.

19\. கற்பியலில் தலைவிக்குரிய கூற்றுகளைத் தொகுத்துரைக்க.

20\. அறத்தொடு நிலை பற்றிய கருத்துக்களைச் சான்றுகளுடன் விவரிக்க.

| F–7228 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA4C1 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2022.**

**Fourth Semester**

தமிழ்

தொல்காப்பியம் — பொருளதிகாரம் (பேராசிரியர் உரை)
(பின் நான்கியல்கள்)

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. 'எடுத்த நான்கே நான்கென மொழிப' — விளக்கு.

2. நிம்பிரி என்றால் என்ன?

3. 'இரட்கை கிளவி இரட்டை வழித்தே' — பொருள் தருக.

4. 'கிழவோர்கு உவமம் ஈரிடத்து உரித்தே' — விளக்குக.

5. தூங்கலோசை என்றால் என்ன?

6. கலிப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

7. சித்திர வண்ணம் என்றால் என்ன?

8. தோல் என்றால் என்ன?

9. காண்டிகையுரை என்றால் என்ன?

10. மரத்தின் உறுப்புப் பெயர்களைக் கூறுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) 'நாலிரண் டாகும் பாதுமாருண்டே' — விளக்குக.

(அல்லது)

(ஆ) பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகளை விளக்கி எழுதுக.

12. (அ) உருவுமத்திற்குரிய உருபுகள் யாவை? தக்க சான்று தருக.

(அல்லது)

(ஆ) 'தத்தம் மரபில் தோன்றுமன் பொருளே' — விளக்குக.

13. (அ) பாக்களுக்குரிய தளைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) வெண்பாவின் இலக்கணம் கூறி, அதன் வகைகளை விளக்கி எழுதுக.

14. (அ) உரையின் வகைகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) 'தொல்நெறி மரபின் கற்பிற்குரியர்' — தெளிவுபடுத்துக.

15. (அ) தொல்காப்பியர் சுட்டும் பெண்பாற் பெயர்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) நூலின் குற்றமும் குணமுமாக தொல்காப்பியர் உரைப்பன யாவை? விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. அகத்திற்கும் புறத்திற்குமான மெய்ப்பாடுகள் குறித்துக் கட்டுரை வரைக.

17. உவமைக்குரிய நிலைக்களன்களை விவரிக்க.

18. தொல்காப்பியர் அசைகள் குறித்துக் கூறும் இலக்கணங்களைத் தொகுத்துரைக்க.

19. செய்யுள் வனப்புகளாகத் தொல்காப்பியர் கூறும் கருத்துக்களைக் தொகுத்துரைக்க.

20. நான்கு வருணத்தாருக்கும் ஓதப் பெற்ற மரபுகளைத் தொல்காப்பியர் வழி நின்று விவரிக்க.

| F–7229 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA4C2 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2022.**

**Fourth Semester**

தமிழ்

நாட்டுப்புறவியல்

**(CBCS – 2017 onwards)**

Time : Three Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. நாட்டுப்புறவில் அறிஞர்கள் மூவரின் பெயரினைக் கூறுக.

2. நாட்டுப்புறவியலின் தந்தை யார்?

3. நாட்டுப்புறப் பழமொழிகள் இரண்டின் பெயரினைக் கூறுக.

4. விடுகதை என்றால் என்ன?

5. நம்பிக்கை என்றால் என்ன?

6. நாட்டுப்புறப் பெண் தெய்வங்கள் ஐந்தினைக் கூறுக.

7. ஆண்கள் ஆடும் ஆட்டங்கள் மூன்றினைக் கூறுக.

8. சிலம்பாட்டம் என்றால் என்ன?

9. உளவியல் என்றால் என்ன?

10. நாட்டுப்புறவியலை மானுடவியல் நோக்கில் ஆராய்ந்த அறிஞர்கள் இருவரின் பெயரினைக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நாட்டுப்புற இயல் பெயர் விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) தமிழக நாட்டுப்புற இயலும் நூல்களும் குறித்து விளக்கி எழுதுக.

12. (அ) நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் குறித்துத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புற இலக்கியங்கள் குறித்து விளக்குக.

13. (அ) நாட்டுப்புற மக்களிடம் சடங்கள் பெறுமிடத்தினை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புற மக்களிடம் பழக்கவழங்கங்கள் பெறுமிடத்தினை ஆராய்க.

14. (அ) தேவராட்டம் என்றால் என்ன? அதன் சிறப்புக்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) கைவினைக் கலைகளின் வகைகள் குறித்து விளக்கி எழுதுக.

15. (அ) நாட்டுப்புறப் பாடல்களை மானுடவியல் நோக்கில் விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறப் பாடல்களை மொழியியல் நோக்கில் ஆராய்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. உலக நாட்டுப்புற இயலின் வரலாறு குறித்துக் கட்டுரை வரைக.

17. நாட்டுப்புறப் பாடல்களில் தாலாட்டுப் பெறுமிடத்தினை ஆராய்க.

18. நாட்டுப்புற வழிபாடுகள் குறித்துக் கட்டுரை வரைக.

19. தமிழக நாட்டுப்புற ஆடல் கலைகள் குறித்துக் கட்டுரை வரைக.

20. நாட்டுப்புறப் பாடல்களில் அறியலாகும் சமூகவியல் நிகழ்வுகளை விவரிக்க.

| F–7230 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA4E2 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2022.**

**Fourth Semester**

தமிழ்

விருப்பப்பாடம் — சுற்றுலாவியலும் பயன்பாடும்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours　　　　　　　　Maximum : 75 Marks

பகுதி அ　　　　　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. 'டோர்னஸ்' என்றால் என்ன? அது எம்மொழிச் சொல்?

2. சுற்றுலாவின் நோக்கங்கள் மூன்றினைக் கூறுக.

3. உலகின் முதல் சுற்றுலா முகவர் யார்?

4. இந்தியச் சுற்றுலாத் தளங்கள் மூன்றின் பெயரினைக் கூறுக.

5. அந்நியச் செலாவணி என்றால் என்ன?

6. சுற்றுலா வருமானத்தைப் பெருக்கக் கையாளும் உத்திகள் இரண்டினைக் கூறுக.

7. பொருளாதாரம் என்றால் என்ன?

8. 'மேசை' என்றால் என்ன?

9. பன்னாட்டு புகழ்மிக்க விமானத் தளங்கள் நான்கினைக் கூறுக.

10. 'கொள்வினை மேலாளர்' என்பவர் யார்?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் <u>ஒரு பக்க</u> அளவில் விடை தருக.

11. (அ) சுற்றுலா குறித்து அறிஞர்கள் கூறும் வரையறைகளைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) தற்காலத்தில் சுற்றுலாவின் முக்கியத்துவம் குறித்து விளக்குக.

12. (அ) இந்தியச் சுற்றுலாத் தளங்களில் 'திருவனந்தபுரம்' பெறுமிடத்தினை ஆராய்க.

(அல்லது)

(ஆ) தமிழகச் சுற்றுலாக் கழகங்கள் குறித்து விளக்கி எழுதுக.

13. (அ) "வளர்ந்து வரும் நாடுகளுக்குச் சுற்றுலா கைகொடுக்கும் கருவி" என்னும் கூற்றை ஆராய்க.

(அல்லது)

(ஆ) வேலைவாய்புகளை உருவாக்குவதில் சுற்றுலா பெருமிடத்தினை ஆராய்க.

14. (அ) இந்தியாவிற்குச் சுற்றுலாப் பயணிகள் வருவதற்கான காரணங்களை ஆராய்க.

(அல்லது)

(ஆ) உலகச் சுற்றுலா மையங்களின் பணிகள் குறித்து விளக்கி எழுதுக.

15. (அ) சுற்றுலாத் துறையில் "சுற்றுலா நடத்துனர்" பெறுமிடத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) சுற்றுலா மேம்பாட்டிற்கு உணவின் இன்றியமையாமை குறித்து விளக்கி எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சுற்றுலாவின் பயன்பாடுகள் குறித்து விவரிக்க.

17. உலக அளவில் சுற்றுலாத்துறையின் வளர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

18. பன்னாட்டுப் பொருளியல் செயல்பாடுகளில் சுற்றுலாவின் தாக்கம் குறித்துக் கட்டுரை வரைக.

19. தமிழகச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சாதனைகள் குறித்துக் கட்டுரை வரைக.

20. சுற்றுலா வழிகாட்டியின் பணிகள் குறித்து விவரிக்க.